செ.வெ.எண். 128 நாள்: 10.09.2016

# பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர காவல்துறையும் இணைந்து என்.எஸ்.சி. போஸ் சாலையில் உள்ள நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை !

********

பிராட்வே, என்.எஸ்.சி. போஸ் சாலையில் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்ட பகுதி என்பதால், இப்பகுதியில் நடைபாதை ஆக்கிரமிப்பு எதுவும் இல்லாமல் பராமரிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர காவல் துறைக்கும் ஆணையிட்டுள்ளது. இதுசம்பந்தமாக, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல் துறை இணைந்து என்.எஸ்.சி போஸ் சாலையில் நடைபாதையில் அனுமதியின்றி வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளை பலமுறை எச்சரித்தும் மற்றும் தங்கள் பொருட்களை தாமே எடுத்து செல்வதற்கு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

இந்த வியாபாரிகள் அனுமதியின்றி மீண்டும் என்.எஸ்.சி. போஸ் சாலையில் நடைபாதையில் தற்காலிகமாக மரத்தட்டு மற்றும் கூடைகள் வைத்து வியாபாரம் செய்து, பொதுமக்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறு விளைவித்து வந்தனர். இதனை முற்றிலும் தடுக்கும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5, மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் தலைமையில் கனரக வாகனம், பெருநகர காவல் துறையின் உதவி ஆணையாளர் மற்றும் காவலர்களுடன் 09.09.2016 அன்று காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபாதை ஆக்கிரமிப்புகள் முற்றிலும் அகற்றப்பட்டு, வியாபாரம் செய்த பொருட்கள் கையகப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டன. ஆக்கிரமிப்பு அகற்றலின் போது, சுமார் 200 கிலோ பழங்கள், 200 கிலோ காய்கறிகள், 5 தற்காலிக மரத்தட்டுகள் அகற்றப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை என்.எஸ்.சி போஸ் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக அகற்றப்படும் வரை தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.